பண்புகளையும், அதிலுள்ள சரக்குகளின் தன்மைகளையும் தெரிந்து கொள்ளாத ஒரு நோயாளிக்கும் அந்த மருந்து பலன் தரவே செய்கிறது அல்லவா! அதுபோலவேதான் தாய் மொழியிலே பூசனை செய்து ஓதுவார் நிலையும் ஆகும்.

ஆனால் யோகம் பயில்கிற ஒரு மாணவனின் நிலை அவ்வாறு இல்லை. அவன் வெறும் சொற்களை ஓதுகிறவன் இல்லை. அந்தச் சொற்கள் தாங்கி வருகிற செயல்களைப் புரிகிறவன் அவன். அவனுக்கு விநாயகர் அகவல் என்பது ஒரு செய்யுள் நூல் மட்டும் இல்லை. அது அவனுக்கு ஒரு ஞானயோகக் களஞ்சியமாகிய சித்தர்களின் பாடநூலேயாகும். இந்தக் கண்கொண்டு அவ்வையாரின் அகவலைப் பார்த்தோமானால், அது ஓர் சித்தர் இலக்கியம் என்பது புலனாகும். இது காரணம் பற்றியே இந்த நூல் எல்லா மக்களுக்கும் பெரிதும் பயன்படுகிற ஒரு சித்தர் நூலாகவும், ஞானகுருமார்கள் மாணவர்களுக்கு உபதேசம் செய்யும்போது கையாளுகிற ஒரு பாடநூலாகவும் திகழ்கிறது. சுருங்கச் சொல்லின், சித்தர் இலக்கியமாகிய ஞான உணவுக்கு அவ்வையாரின் விநாயகர் அகவல் ஒரு பதச்சோறு ஆகும். இதுவே இதன் முக்கியம். இதுவே இதன் சிறப்பும் ஆகும்.

★

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ(கு) எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் (து) அருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் (து) அங்கிசை *நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

★ அங்கிசை என்பதற்கு அங்குச என்றும் ஒரு பாடம்.

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் (கு) அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் (கு) அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் (து) அழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருளு தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

- அவ்வையார்

* * *

2. விநாயகர் வடிவங்கள் - வகையும் தொகையும்

விநாயகர் அகவலில் நாம் ஆராய்ந்த வழிபாட்டு முறைக்ள் எல்லாம் பெரும்பாலும் மனத்தின் எண்ணங்களில் நிகழ்கின்ற செயல்முறைகளைச் சார்ந்தவையாம். எனினும், இதே வழிபாட்டு முறைகள், உருவ நிலையில் நின்று வழிபடுகின்ற பெரியோர்களுக்கும் பொருந்தக்கூடியவையே. இந்த உண்மையை ஒட்டி விநாயகர் உருவங்களில் உள்ள வேறுபாடுகளை ஆராய்வது ஏற்புடைத்து ஆகும். ஏனென்றால், விநாயகர் அகவலின் துதி முறையானது இந்த வேறுபாடுகள் அனைத்திற்கும் ஒவ்வக் கூடியதே.

ஏற்கனவே பொது நோக்கிலே விநாயகரின் உருவங்களைத் தொகுப்பாகப் பார்த்தோம். இப்போது கணபதியின் வடிவங்களை ஆராய்ந்து கூறியுள்ள சில பெரியோர்கள்தம் குறிப்புக்களைக் கொண்டு விரிவாகவே பார்க்கலாம்.

சிவயோகி இரத்தினசபாபதியார் அவர்கள் அவ்வையின் குறளுக்கும் விநாயகர் அகவலுக்கும் சில அரிய குறிப்புக்கள் எழுதியது உண்டு. அவற்றின் ஒரு பகுதி 'காரிய சித்தி' என்ற பெயரிலே நூலாக வெளிவந்துள்ளது. இதனுடைய நோக்கம் விநாயகர் அகவலின் ஞானப் பொருளை விளக்குவதே என அமைந்ததால், அவர் எழுதிவைத்த குறிப்புகளில் உருவ வேறுபாடுகளைப் பற்றியன நூல்வடிவம் பெறவில்லை.

திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து வெளிவந்துள்ள 'கணபதி' என்னும் ஓர் அரிய நூலிலே, பெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் ஆழ்ந்து ஆராய்ந்து, கணபதியின் உருவ வகைகளைப் பற்றிய நுட்பமான விளக்கங்களை வழங்கி இருக்கிறார்கள்.

மாணிக்க யோகீசுவரர் போன்ற பெரியோர்களும் விநாயகரின் உருவங்களைப் பற்றிய பல செய்திகளை நமக்குத் தந்திருக்கிறார்கள்.

இந்தப் பெரியோர்களின் குறிப்புக்களை எல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து, கணபதி வடிவின் வகைகளிலே முப்பத்திரண்டு உருவங்கள் முக்கியமாகப் பேசப்பெறுகின்றன. இந்த உருவ வகைகள் வருமாறு:

1. பால கணபதி

பெயருக்கு ஏற்ற முறையிலே பால கணபதியின் வடிவம் குழந்தையின் வடிவமாகும். பிள்ளையார் என்ற சொல்லுக்கு அடிப்படையான பொருள் குழந்தை என்று இருப்பினும், வணங்குகின்ற பக்தர்களின்

மனநிலைக்கு ஏற்ப விநாயகரின் வயதும் வளர்ந்து வந்துள்ளது, காலப் போக்கிலே! எனவே பிள்ளைப் பிள்ளையார் என்பதுபோல 'பால' என்ற அடைமொழியைத் தந்து, திருமேனியிலும் பிள்ளையாகக் கோலம் தருகிற உருவத்திற்குப் பால கணபதி என்று பெயரிட்டார்கள்.

இந்த உருவத்திற்குத் துதிக்கை தவிர நான்கு கரங்கள். ஐங்கரன் என்று அழைப்பதற்கு உரிய அழகிய உருவம். முகம் ஆனை முகமே. நிறம் காலையில் உதித்து வருகிற செங்கதிர்ச் செல்வனைப் போன்ற ஒளிவீசும் சிவப்பு நிறம். நான்கு கைகளிலே ஒரு வலக்கையில் வாழைப்பழம்; மற்றொரு வலக்கையில் பலாப்பழம். இடக் கைகளுள் ஒன்றிலே கரும்பு; மற்றொன்றிலே மாங்கனி. துதிக்கையில் மோதகம். அமர்ந்திருப்பது செந்தாமரை மலரிலே.

2. தருண கணபதி

விநாயகருடைய கைகள் ஐந்து என்ற ஒரு கணக்கு இருப்பது போலவே, எட்டு என்றும் பிறிதொரு கணக்கு உள்ளது. இந்தக் கணக்கிற்கு ஏற்ப இவை எட்டுத் திசைகளைக் குறிக்கின்ற கைகள் என்று சொல்வது ஒரு மரபு. யோகிகள் இந்த எட்டிற்கு வேறு சில விளக்கங்களைக் கூறி நுண் உடலின் நுட்பங்களை விளக்குவதும் உண்டு. இந்த விளக்கங்களுக்குரிய ஆதாரங்கள் விநாயகர் அகவலிலேயே வருகின்றன.

உருவ முறையிலே கைகள் எட்டாக இருப்பதால், இந்தக் கரங்களுக்கு உரிய பொருள்களும் எட்டாக அமைந்துள்ளன. அவை பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு ஆகிய எட்டுமாம். இந்த எட்டிற்கும் உள்ள ஞானப்பொருள் அவ்வையார் பாடலிலே உட்கிடையாகப் பொதிந்துள்ளது. இந்தத் தருண கணபதியின் நிறம் நண்பகற் பொழுதில் சூரியனின் அனல்நிறம் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இவருடைய கரங்களில் எட்டு, வலப்பக்கம் மூன்றும் இடப்பக்கம் நான்கும், நடுவில் உள்ள தும்பிக்கையோடு இணைந்த தொகையாகும்.

சில ஓவியங்களிலே இந்த உருவத்திற்குச் சில அணிபணிகள் புனைந்துள்ளதைக் காண்கிறோம்.

3. பக்தி கணபதி

கணபதியின் வடிவங்களிலே மிகவும் அழகுள்ள ஒரு வடிவம் இது. இந்தத் திருமேனியின் நிறம் வெண்மையாகும். இதனைச் சரத் காலத்துப் பௌர்ணமியில் தோன்றுகின்ற சந்திரன் என்று வடநூல்கள் பேசுகின்றன. இவருடைய கரங்கள் நான்கு. இந்தக் கைகளிலே மாம்பழம், வாழைப்பழம், தேங்காய், பாயசம் நிறைந்த சிறிய கலன் காணப்பெறுகின்றன. தும்பிக்கையானது பாயசப் பாத்திரத்தைத் தொடுகின்ற நிலையில் விளங்குகிறது. இந்தக் கையையும் சேர்த்தால் பக்தி கணபதி ஐங்கரனாகிறான். சில ஓவியங்களிலே இவருடைய காலில் தண்டை அணிந்து காணப்பெறுகிறது.

4. வீர கணபதி

இந்த உருவம் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறது. இம் மூர்த்தி பதினாறு கைகள் உடையவர். நிறம் சிவப்பு, முகமும் சற்றே செம்மை படர்ந்தது. கைகளிலே வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு ஆகிய கலங்கள் காண்கின்றன. வீரகணபதி என்ற நிலைக்கு ஏற்ப இவை அமைந்துள்ளன. இந்த உருவத்தை இக்காலத்தில் வழிபடுவோர் அரியர்.

5. சக்தி கணபதி

விநாயகரின் வடிவங்களிலே இந்த உருவத்தின் வழிபாடு குறித்து எத்தனையோ சிறப்பு விதிகள் கூறப்பெறுகின்றன. தில்லியிலும் பம்பாயிலும் இந்த உருவத்தை வழிபடுகின்ற சில அன்பர்களைப் பார்த்திருக்கின்றேன். இந்த வழிபாட்டின் இல்லறப் பயன்களைப் பற்றி இவர்கள் மிக உயர்வாகக் கூறியதைக் கேட்டிருக்கிறேன். சில வடநூல்களில் இந்த உருவ அமைப்பின் இலக்கண முறைகள் விரிவாகக் காணப்பெறுகின்றன. இந்த மூர்த்தியின் நிறம் அந்தி வானத்தின் நிறம் என்று இந்த நூல்கள் குறிப்பிடுகின்றன.

செக்கர் மேனியரான இந்தக் கணபதி, பச்சை நிறம் கொண்ட தேவியைத் தழுவிய நிலையிலே காட்சி தருகிறார். நாயகனும் நாயகியும் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக் கொண்டிருப்பதே தனிச்சிறப்பு ஆகும். இவ்விநாயகர் பாசம், பூமாலை ஆகியவற்றைத் தாங்கிய கரத்தினராய் அபயகரம் கொண்டு திகழ்கிறார்.

6. துவிஜ கணபதி

இந்த உருவம் ஓர் அபூர்வமான வடிவமாகும். ஏனென்றால் இவ்வடிவத்திற்கு நான்கு யானை முகங்கள். எதிரிலும், இருபுறமும், பின்புறமாக இவை காட்சி தருகின்றன. கைகள் நான்கு. அதாவது நான்கு முகத்திலுமுள்ள நான்கு தும்பிக்கைகள் தவிர நான்கு கைகள். இந்த நான்கிலும் வலக்கைகளில் ஒன்றில் தண்டம், மற்றொன்றில் அட்சமாலை; இடப்பக்கம் ஒன்றில் கமண்டலம், மற்றொன்றில் புத்தகம். மணிக்கட்டுகளிலே வளையல்கள் அணிந்து காண்கிறார் இந்த விநாயகர். இவற்றைக் காப்புக்கள் எனினும் ஒக்கும். இவருடைய நிறம் சந்திரனைப் போன்ற வெண்மை நிறம்.

இந்த விநாயகரைச் சித்திரிக்கின்ற சில பழைய ஓவியங்கள் இவருக்குச் சிவப்பு கலந்த மஞ்சள் நிற ஆடையை அணிவித்துள்ளன. இவருடைய இரண்டு கால்களிலும் தண்டைகளும் காணப்பெறுகின்றன. கழுத்தில் பதக்கம் தொங்குகிற மணிமாலை சுடர்விடுகிறது. உத்தரியம் சுற்றித் தொங்குகிறது. அமர்ந்த திருக்கோலத்தில் காட்சி தருகிற இந்த விநாயகர், தேவி இன்றித் தனிமைக் கோலத்திலேயே காட்சி தருகிறார்.

7. சித்தி கணபதி

இந்த விநாயக மூர்த்தியின் நிறம் பொன்கலந்த பசுமை நிறம். இடக்காலை மடித்து, வலக்காலைத் தொங்கவிட்டுக் கொண்டு அமர்ந்த

நிலையிலே காட்சி தருபவர். ஐந்து கரங்களிலும் மாம்பழம் பூங்கொத்து எள்ளுருண்டை, கரும்புத்துண்டு, பரசு ஆகிய ஐந்தும் தாங்கியவர். கிரீடம் அணிந்து காட்சி தருகிற இந்த விநாயக மூர்த்திக்கு, அணி பணிகள் புனைந்து கோலம் செய்வது மரபாகும்.

8.உச்சிஷ்ட கணபதி

இந்த விநாயக மூர்த்தியின் நிறம் வானத்தின் நீல நிறமாகும் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருபவர். நீலோற்பலம், மாதுளம்பழம், நெற்கதிர், அட்ச மாலை, வீணை ஆகியன தரித்தவர்.

இந்த அரிய உச்சிஷ்ட்ட விநாயகரை மந்திரவாதிகள் சில வேற்றுமைகளோடு உருவம் செய்து வழிபடுகிறார்கள். மாபெரும் சித்திகள் விளைவதற்கு இந்த வழிபாட்டை உறுதுணையாக கொள்கிற பக்தர்கள் பலராவர். இவர்கள் வழிபடுகி ற வடிவத்திலே, விநாயகர் தமது தும்பிக்கையைத் தேவியின் யோனி மீது வைத்துக் கொண்டிருக்கும் காம மூர்த்தியாக விளங்குகிறார்.

9.விக்ன கணபதி

இந்த விநாயகரின் நிறம் பொன்நிறமாகும். இவருடைய திருக்கரங்களிலே சங்கு, மலரம்பு, கரும்புவில், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பானம் ஆகியவை காண பெறுகின்றன. திருமேனி முழுதும் ஆபரண மயமாக இருக்கிறது.

10.க்ஷிப்ர கணபதி

இந்த விநாயகரின் நிறம் அழுத்தமான சிவப்பு நிறம். இந்த நிறத்தை வட நூலார் செவ்வரத்தம் பூவுக்கு ஒப்பிடுகிறார்கள். இவர் தமது கைகளிலே ஏந்தி உள்ளவை தந்தம், பாசம், கற்பகக் கொடி, இரத்தின கும்பம், அங்குசம் ஆகிய ஐந்துமாம்.

11. ஏரம்ப கணபதி

இவருடைய நிறம் கரும்பச்சை அல்லது கருமை கலந்த பசுமையாகும். சிங்க வாகனத்தில் காட்சி தருகிறார். இவருக்கு நான்கு புறமும் நான்கு ஆனைமுகங்களும் முன் முகமாகிய ஆனை முகத்திற்கு மேல் இன்னுமொரு ஆனை முகமும் காண்கிறோம். இவர் அய்ம்முகக் கணபதி ஆவார். அபயம், வரதம் ஆகிய கரங்கள் முதன்மையாகக் காட்சி தருவதோடு மற்றக் கரங்களில் பாசம், தந்தம், அட்ச மாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் ஆகியவற்றைத் தாங்கி நிற்கிறார்.

12.லட்சுமி கணபதி

இவருடைய நிறம் வெண்மையானது. வடநூல்கள் இந்த வெண்மையை அமுதப் பிரவாகம் என்று அழைக்கின்றன. நீலத் தாமரைப் பூவை ஏந்திய இரண்டு தேவியர்களோடு காட்சி தருகிறார். இவருடைய கைகள் எட்டு. இவற்றில் கிளி, மாதுலம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கடகம் ஆகியவற்றைத் தாங்கியிருக்கிறார்.

13. மக்கா கணபதி

இந்த விநாயகர் மூன்று கண்களை உடையவர். இவருடைய நிறம் சிவப்பு. செங்கதிர் போன்ற வண்ணம். மடியிலே தேவி அமர்ந்திருக்கிறார். இவருடைய கைகளில் மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், குமுதம், நெற்கதிர், தந்தம், இரத்தின கலசம் ஆகியவற்றைக் காண்கிறோம். மடியில் அமர்ந்திருக்கும் தேவி கையில் தாமரை மலரை ஏந்தியிருக்கிறாள். தழுவிய நிலையிலே அமர்ந்திருக்கிறார். முக்கண்ணராய் விளங்குகின்ற இந்த மூர்த்தி பிறைமுடியரும் ஆவார்.

14. விஜய கணபதி

இந்த விநாயகருடைய வாகனம் பெருச்சாளியாகும் நிறம் சிவப்பு. பாசம், அங்குசம், தண்டம், மாம்பழம் ஆகியன ஏந்தியவர்.

15. நிருத்த கணபதி

இந்த விநாயகர் கற்பக மரத்தின் அடியில் எழுந்தருளி இருக்கிறார். இவரை கூத்தாடும் பிள்ளையார் என்றும் அழைப்பர். இவருடைய விரல்களில் மோதிரங்களை காணுகிறோம். கைகளில் பாசம், அங்குசம், கோடரி, தந்தம், அபூபம் ஆகியன தாங்கியவர். மேனி பொன்நிறமானது. குதித்தாடும் நிலையிலே இவர் காட்சி தருகிறார்.

16. ஊர்த்துவ கணபதி

இவர் பொன்நிறமானவர். பச்சை நிறத்துத் தேவியைத் தழுவிக்கொண்டிருப்பவர். கைகளிலே நீலப் பூ, நெற்பயிர், தாமரை, கரும்பு, பானம், வில், தந்தம் ஆகியவற்றை உடையவர்.

17. ஏகாஷர கணபதி

இந்த விநாயகர் பெருச்சாளி வாகனத்திலே பதுமாசனத்தில் இருப்பவர். இவருடைய நிறம் சிவப்பு. சிவப்புப் பட்டாடை அணிந்து காட்சி தருகிறார். இவருடைய மாலையும் செம்மலர் மாலை. மூன்று கண்களை உடையவர். குறுங்கையும் குறுந்தாளும் உடையவர் மாதுளம் பழம், பாசம், அங்குசம், வரதம் ஆகியன கூடிய கையர்.

18. வர கணபதி

இவரும் பிறைமுடியரே. நிறம் சிவப்பு. மூன்று கண்கள் உடையவர். பாசம், அங்குசம் தாங்கியவர். ஒரே முகம். ஆனை முகம் உடையவர். மகுடம் அணிந்தவர்.

19. திரயாக்ஷர கணபதி

இவரைப் பற்றிய வடமொழிச் செய்யுளின் பொருள் வருமாறு :

அசைகின்ற காதுகளை உடையவரும், சாமரை அணிந்தவரும் ஆனவர். பொன்னிறமானவர். நான்கு கைகளை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

20.க்ஷிப்ர பிரசாத கணபதி

இந்த விநாயகரின் தனிப்பண்பு இவருடைய பேழை வயிறாகும். வகைவகையான ஆபரணங்கள் அணிந்தவர். வடமொழி நூல்களின்படி இவருடைய கரங்களில் உள்ள பொருள்கள் வருமாறு : பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம் பழம், தாமரை, தருப்பை, விஷ்பரம் இவற்றை தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தர் பேழை வயிற்றை உடையவர்.

21.ஹரித்திரா கணபதி

மஞ்சள் நிறத்தில் காட்சி தருகிற இந்த விநாயகருக்கு நான்கு கைகள். அவற்றில் உள்ளவை பாசம், அங்குசம், தந்தம், மோதகம் ஆகியன.

22. ஏகதந்த கணபதி

இந்த விநாயகரின் நிறம் நீலம் ஆகும். இவருக்குப் பேழை வயிறு, கோடரி, அட்ச மாலை, வட்டு, தந்தம் இவற்றை உடையவர்.

23. சிருஷ்டி கணபதி

இந்த விநாயகரின் நிறம் சிவப்பு. வாகனம் பெருச்சாளி. பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றை தாங்கிய கைகளை உடையவர்.

24. உத்தண்ட கணபதி

இந்த விநாயகர் பத்துக் கைகளை உடையவர். பச்சை மேனி கொண்ட தேவியினால் தழுவப் பெற்றவர். தேவியின் கையிலே தாமரைப்பூ. இவருடைய கைகளிலே உள்ளவை நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், இரத்தின கலசம், பாசம், நெற்கதிர், மாலை ஆகியன.

25.ரண மோசன கணபதி

இந்த விநாயகரின் நிறம் வெண் பவளம் போன்றது என வடநூலார் குறிப்பிடுகிறார்கள். இவர் உடுத்தியுள்ள ஆடை செந்நிறப் பட்டாகும். கைகளிலே இவர் தரித்திருப்பவை பாசம், அங்குசம், தந்தம் நாவற்பழம் ஆகியவை.

26. துண்டி கணபதி

மற்ற விநாயகர் உருவங்களைப் போலவே காட்சி தருகிற இந்த விநாயகர், அட்ச மாலை, கோடரி, இரத்தின கலசம், தந்தம் ஆகிய நான்கையும் தாங்கிய கைகளோடு கோலம் தருகிறார்.

27. துவி முக கணபதி

இந்த விநாயகருக்கு இரண்டு முகங்கள் உள்ளன. தலையிலே இரத்தின மகுடம். இவருடைய உடை செம்பட்டாடை. இவருடைய

மேனி பசலை நிறம், கைகளில் ஏந்தியிருப்பவை தந்தம், பாசம், அங்குசம், இரத்தின பாத்திரம் ஆகியன.

28. மும்முக கணபதி

இந்த விநாயகரின் நிறம் புரசம் பூவை ஒத்தது. சிவப்பு. வலக்கைகளில் கூர்மையான அங்குசம் காணப்படுவதோடு அட்ச மாலையும் வரதமுமாகக் காட்சி தருகிறார். இடக்கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் ஆகியன காண்கிறோம். பொற்றாமரை ஆசனத்தில், மையமான பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருக்கிறார்.

29. சிங்க கணபதி

ஆனைமுகத்தோடு சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருக்கும் இந்த விநாயகர் தமது வலக்கைகளில் வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் ஆகியவற்றைத் தாங்கியிருக்கிறார். இடக்கைகளில் காணப்படுவன தாமரை, இரத்தின கலசம், பூங்கொத்து, அபயம் ஆகியன. இவருடைய நிறம் வெண்மையானது.

30. யோக கணபதி

பெயருக்கு ஏற்ப இவர் யோக நிலையில் காட்சி தருகிறார். தரித்திருப்பது யோகப்பட்டம். நிறம் இளஞ்சூரியன் போன்றது. இவர் உடுத்தியுள்ள ஆடையின் நிறம் இந்திர நீலம். இவர் ஏந்தியிருப்பவை பாசம், அட்சமாலை, யோகத்தண்டம், கரும்பு ஆகியன.

31. துர்கா கணபதி

இவருடைய நிறம் சுட்ட பசும்பொன்னின் நிறம். ஆடை செந்நிறமானது. இவருக்கு கைகள் எட்டு. மிகப் பெரிய மேனி. வலக்கைகளில் ஏந்தியிருப்பவை அங்குசம், பானம், அட்சமாலை, தந்தம் ஆகியன. இடக்கைகளில் பாசம், வில், கொடி, நாவற்பழம் ஆகியவற்றைக் காண்கிறோம்.

32. சங்கட ஹர கணபதி

இந்த விநாயகர் நீல நிறத்து ஆடையை அணிந்து கொண்டு இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு செந்தாமரைப் பீடத்திலே நிற்கிறார். இவருடைய இடத் தொடையில் அம்மை காட்சித் தருகிறாள். அவளுடைய மேனி பசிய நிறம். கையில் நீலப் பூ. விநாயகரின் வலக்கையில் அங்குசம், வரதம்; இடக்கையில் பாசம், பாயச பாத்திரம்.

மேலே நாம் கண்ட முப்பதிரண்டு உருவ வேறுபாடுகளையும் அவற்றின் இலக்கணத்தை வரையறை செய்கின்ற வடமொழி செய்யுள்களையும் மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் போன்ற பெரும் புலவர்களும் சேங்காலிபுரம் அநந்தராம தீட்சிதர் போன்ற வடமொழி புலமை மிக்க பௌராணிகர்களும், இரத்தின சபாபதியார் போன்ற யோகிகளும், விரிவாக எழுதியும் பேசி விளக்கியும் உணர்த்தி

வந்துள்ளார்கள். இந்த உருவங்களை ஓவியங்களிலே தீட்டும்பொழுது வரையறை செய்யப்பெறுகிற நிறங்களை மைவண்ணங்களிலே எழுதிக்காட்ட இயலும். ஆனால் கற்சிலைகளிலும், உலோக படிமங்களிலும் இந்த வடிவங்களை உருவாக்கும், பொழுது நிறங்களைக் குறிப்பிடுவதற்குப் பெரும்பாலும் இந்த திருமேனிகளிலே புனையப் பெறுகிற அணிபணிகளையும், ஆடைகளையுமே பயன்படுத்துகிறோம். எது எவ்வாறாயினும், விநாயகருடைய திருமேனி பற்பல வடிவங்களிலே, பற்பல நிறங்கள் கொண்டு அமைந்திருக்கிறது என்பது தோற்றம்.

சித்தர்கள் இந்த உருவ வேறுபாடுகளையும், நிற வேறுபாடுகளையும் பருப்பொருள் நிலையிலே வகைப்படுத்திச் சொல்வதுபோல் தோன்றினாலும், இந்த நிறங்களும் வடிவங்களும் மனத்தின் நிறங்கள், எண்ணங்களின் வடிவங்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்றைய விஞ்ஞான ஆய்வுகளிலே இத்தன்மையான எண்ணங்களுக்கும், மனத்தின் நினைவுகளுக்கும், இதயத்தின் உணர்ச்சிகளுக்கும் நிறங்களும் உருவங்களும் பேசப்பெறுகின்றன. சாதாரண நிலையிலுள்ள மனிதர்களின் சீற்றம், பொறாமை, வஞ்சகம் போன்ற எண்ண உணர்ச்சிகளுக்கும் மேனாட்டு விஞ்ஞானிகள், இன்னின்ன உணர்ச்சி இன்னின்ன நிறமானது என்று வகைப்படுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதனோடு கூடக் காதுகள், முகங்கள், கரங்கள் போன்ற உறுப்பின் வடிவங்களுக்கும் மனதின் எண்ண அலைகளுக்கும் தொடர்பு இருப்பதையும் இன்றைய அறிவியல் கண்டு சொல்லி வருகிறது. அன்பும் கருணையும் வெண்மை கலந்த செந்தாமரை நிறத்திலும், பொன் நிறத்திலும், வெண்மை கலந்த செந்நீலத்திலும் உறைந்துள்ளன என்று அண்மைக்காலத்து அறிவியற் சோதனைகள் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

சிங்கத்தின் முகம், யானையின் முகம், தாமரை மலர் ஆகிய வடிவங்களுக்குள்ள ஆன்மப் பொருளை 'க்ரீலியன்' படப்பிடிப்புக் கருவிகள் போன்ற அதிநுட்ப விஞ்ஞானக் கருவிகள், நம் கண்களுக்கு உணர்த்தக்கூடிய அளவில் அடுத்துவரும் ஆண்டுகளிலே பல புதிய கண்டுபிடிப்புகள் நிகழவிருக்கின்றன.

விஞ்ஞான அறிவியல் மேலும் மேலும் முன்னேறி வருகின்ற இந்தச் சூழ்நிலையிலே, மனத்தின் வடிவங்களையும், நிறங்களையும், ஆன்ம அதிர்வுகளையும் சீர் தூக்கிப் பார்த்து, இந்த இறைவடிவங்களை நாம் நோக்கி அந்த நோக்கினோடு இவற்றை அணுகவேண்டும். அப்படிச் செய்தால் அறிவுக்கு அறிவாக விளங்குகின்ற இத்தகைய உருவங்களை, சித்தர் இலக்கியம் நமக்கு எடுத்துச் சொல்வதன் நுட்பம் அறிவுத் தெளிவோடு நன்கு புலனாகும் என்பதில் ஐயம் இல்லை.

அதோடு இந்த உருவ வேறுபாடுகளில் பொதிந்துள்ள உருவகத்தின் தத்துவக் கோட்பாடுகளைச் சித்தர்கள் எங்ஙனம் வகுத்துள்ளார்கள் என்பது தெளிவாகும். அத்தகைய தெளிவுக்கு ஒரு பெருந்துணையாக நமக்கு உதவுகிற அரிய நூல் அவ்வையாரின் விநாயகர் அகவலாகும்.

3.சித்தர் கொள்கையும் சங்ககாலமும்

சில நாட்களுக்கு முன்பு ஒரு தமிழ் இதழில் ஒரு கட்டுரை படிக்க நேர்ந்தது. அதில் சங்க காலத்துத் தமிழர், இறைவழிபாடுகளில் நாட்டம் இல்லாதவர் என்றும், அவர்களுடைய சமுதாய வாழ்விலே கடவுட் கொள்கையானது கலந்திருக்கவில்லை என்றும் எழுதியிருக்கக் கண்டேன்.

அவ்வையாரின் அகவல் மிகவும் பிற்பட்ட நூல் என்று எண்ணுகிற ஓர் அறிஞர் தமது முடிவுக்குரிய காரணங்களில் ஒன்றாக ஒரு கருத்தைச் சொல்லியிருந்தார். அதாவது அவ்வை சங்க காலத்தவர்; அவருடைய கொள்கையிலே கடவுள் வழிபாட்டுக்கு, அதிலும் விநாயகர் வழிபாட்டுக்கு இடமே இல்லை என்பது!

அவ்வையார் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சி ஒருபுறமிருக்க, சங்க காலத்துக் கடவுட் கொள்கை என்ற ஒரு காரணத்தைக் காட்டி, வழிபாட்டு முறைகள் அந்தக் காலத்தில் இல்லை என்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும் என்பதை ஆராய்வது அவசியமாகும்.

நான் சிந்தித்துப் பார்த்த அளவில், தமிழர்கள் சங்ககாலத்துக்கு முன்பிருந்தே கடவுட் கொள்கையிலே ஆழ்ந்து தோய்ந்தவர்கள் என்றே எண்ணுகிறேன். அதனோடு வழிபாடுகளும் அந்தக் காலத்தில் பயின்று வந்தன என்பதும் பல சான்றுகளிலிருந்து நன்கு தெரியவருகிறது.

சித்தர்கள் 'அறிவர்கள்' என்று தமிழில் அந்தக் காலத்தில் அழைக்கப் பெற்றனர். இதற்கு ஒரு சான்று தொல் காப்பியத்திலேயே காண்கிறோம்.

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்

என்ற தொல்காப்பியச் சூத்திரத்துக்கு உரைகூறுகிற இளம்பூரணர், அறிவனை வானியலோடு கலந்து வருங்காலம் உணர்த்துகிற கணியன் என்று விளக்குகிறார்.

சித்தர்கள் மூன்று காலமும் உணர்ந்தவர் என்பதும், வானியல் என்பது இக்காலத்து வழங்குகிற வான சாஸ்திரம் மட்டுமல்லாது, சோதிடமும் அதையொட்டிய வேறு பலஆன்மக் கணக்குகளையும் உள்ளடக்கியது என்பதும், இங்கே நினைவு கூறவேண்டும். இது ஒருபுறமிருக்க, இதே சூத்திரத்துக்குப் பொருள் கூறுகிற நச்சினார்க்கினியர், 'அறிவன்' என்ற சொல்லுக்குத் தருகிற விளக்கமானது. 'சித்தன்' என்ற சொல்லுக்குரிய பொருளாகவே அமைகிறது.

நச்சினார்க்கினியர் 'அறிவன்' என்ற சொல்லுக்குத் தருகிற பொருள் விளக்கம் வருமாறு :

> "காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினன். இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோன்"

இது நச்சினார்க்கினியர் 'அறிவன்' என்ற சொல்லுக்குத் தருகிற விளக்கம். இந்த விளக்கத்தோடு நில்லாமல், அறிவர்க்குச் சான்றும் கூறுகிறார் நச்சினார்க்கினியர் :

> "கலசயோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவரென்று உணர்க"

என்பது நச்சினார்க்கினியரின் சான்றுரையாகும்!

சித்தர்களுக்கெல்லாம் சித்தரும், திருமூலருடைய திருமந்திரத்தில் இடம் பெற்றவரும், திருமூலருடைய வாழ்க்கையிலேயே பெரும் பங்கு கொண்டவருமான அகத்தியர் ஓர் அறிவர் என்று நச்சினார்க்கினியரால் இங்கே அழைக்கப் பெறுவதை நன்கு சிந்திக்கவேண்டும்.

புறநானூறு என்னும் புகழ்மிக்க சங்க நூலிலே 'அவிர்சடை முனிவர்' பற்றிய விளக்கத்தைக் காணுகிறோம். சித்தர்களின் இயல்பைத் தாயுமானவர் தமது 'சித்தர்கணம்' பற்றிய பாடல்களிலே கூறுகிறார். அவற்றை ஒத்திருக்கின்றன இவ்வரிகள்.

வையத்திலே உள்ள மாந்தர்களின் துயரங்கள் தணிவதற்காக, சூரியன் முதலிய கோள்களின் வெப்பத்தை அமைதிப்படுத்தி, காற்றையே உணவாகக் கொண்டு, அதாவது வாசியோகத்தின் வாயிலாக வான மண்டலத்தில் இவர்ந்து செல்பவரும், வான மண்டலத்தை இயக்கும் அந்தப் பேரியக்கத்திலே தாங்கள் தங்களை ஒன்றவிட்டு சமாதி கூடுபவரும், அடர்ந்த சடைமுடி கொண்டவருமான முனிவர் என்னும் பொருளிலே, இடைக்காடர்கதையை நமக்கு நினைவூட்டும் பாங்கிலே வருகிற அந்தப் புறநானூற்று வரிகள் வருமாறு:

> நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
> தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
> கால் உண வாகச் சுடரொடு கொட்கும்
> அவிர்சடை முனிவர்

என்று புறநானூறு கூறுகிற முனிவர் யார்? சித்தரே! நமது ஆய்வின் முதலாவது தொகுதியின் இறுதியில் வருகிற இடைக்காடர் என்னும் சித்தர் வரலாற்றுக் கதையை இந்த அடிகள் நம் கண்முன் நிறுத்துகின்றன!

சித்தர்கள் அந்தக் காலத்தில் தமிழகத்தில் எவ்வாறு மதிக்கப்பெற்று, எங்ஙனம் வாழ்ந்தார்கள் என்பதற்கு இவை போன்ற சான்றுகள் பல உண்டு.

சித்தர்களின் பயிற்சி முறைகளோடு சேர்ந்து, பத்தர்களின் உருவ வழிபாட்டு முறைகளும் சங்க காலத்துக்கு முன்பிருந்தே வழங்கி வந்துள்ளன.

'கடவுள்' என்ற சொல்லையே ஆய்ந்து பார்த்தால், கடந்து நிற்பது என்ற பரம்பொருட் தன்மை அதன் சொற்பொருளிலேயே அமைந்திருக்கிறது. அதனோடு தொனிப்பொருள் என்ற ஒன்றும் அந்தச் சொல்லின் ஒலியிலே ஓசை செய்கிறது. அதுவே 'உள்' என்பது! உறையுள், செய்யுள் என்பதிலுள்ள 'உள்' என்னும் ஒலி இங்கே ஒரு சிறப்புப் பொருள் பெறுகிறது! அதாவது கடந்தும் உள்ளடங்கியும் நிற்கிறது!

சங்க காலத் தமிழர்களுடைய கடவுட் கொள்கை சித்தர்களையும் அவர்தம் முறைகளையும் பின்பற்றுவதோடு நில்லாது, பொது மக்களுக்கு என்று பயில்கிற வழிபாட்டு நெறியையும் கடைப்பிடித்துள்ளது. எனவே, துதிப் பாடல்கள் பலவும், பல வழிபாட்டு முறைகளும் வழக்கத்தில் இருந்தன என்று தெளிவாகத் தெரிகிறது.

அதிகம் சொல்வானேன்? தொல்காப்பியத்தில் மனிதர்கள் வாழும் நிலங்களையும், வாழ்க்கை நெறிகளையும் வகைப்படுத்திக் கூறியுள்ள இலக்கணச் சூத்திரம் பலரும் அறிந்ததே. இச்சூத்திரத்தில் கருப்பொருள் பற்றிக் கூறுகிற தொல்காப்பியர், தெய்வத்திற்கே முதலிடம் தருகிறார்.

தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
இவ்வகை பிறவும் கருவென மொழிப

என்பது தொல்காப்பியர் சூத்திரம். உண்ணுகிற உணவைவிடக் கடவுளுக்கே முதலிடம் தருகிறது இந்த இலக்கணம்.

நிலத்திற்கு இலக்கணம் வகுக்கிற தொல்காப்பியம், அந்த நிலத்திற்குரிய சிறப்புகளில் எல்லாம் முதன்மையான சிறப்பைத் தெய்வத்திற்கே தருகிறது. இதிலிருந்து அந்த நிலத்தில் வாழ்கிற மக்கட் சமுதாயம், அந்தத் தெய்வத்தை ஆர்வத்தோடு வணங்கி வழிபட்டது என்பது தெளிவு.

சித்தர்கள் கூறுகிற அருவ வழிபாடு அக்காலத்தில் மேலோங்கி இருந்தமைக்குக் கடவுள் என்ற சொல்லே சான்று பகர்கிறது. அதனோடுகூட, உருவ வழிபாடும் சங்க காலத்திற்கு முன்பு இருந்தே தமிழக்தில் மேன்மையுற்று விளங்கி வந்திருக்கிறது என்பதற்கு, நிலப்பகுதிகளின் தெய்வங்கள் சான்றாகின்றன.

குறிஞ்சி நில மக்கள் சேயோனை வணங்கினார்கள் என்றும், மருதநில மக்கள் வேந்தனை வணங்கினார்கள் என்றும், முல்லைநில மக்கள் மாயோனை வணங்கினார்கள் என்றும், நெய்தல் நிலமக்கள் வருணனை வணங்கினார்கள் என்றும் பார்க்கிறோம். இந்தத் தெய்வங்களைத் தவிர, வெற்றி தருவதற்குத் துணைசெய்யும் கொற்றவை வழிபாட்டையும் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். இவை தவிர, பூவும் நெல்லும் படைத்துப் பூசனை செய்கிற வழக்கம்

தமிழ்நாட்டில் இருந்தது என்பதையும், வெறியாட்டு முதலிய சடங்குகள் நடைபெற்றன என்பதையும், மக்கள் மீது அமானுட ஆற்றல்கள் ஆராதனையாக வந்து விளையாடின என்பதையும், தெய்வ ஆற்றலினால் அகவன் மகள் போன்றோர் உற்றதையும் உறுவதையும் உரைத்தனர் என்பதனையும் சங்க நூல்களிலே விரிவாகக் காண்கிறோம்.

திருக்குறளிலே தெய்வம் என்ற சொல்லே பேசப்படுவதோடு கூட, ஆதிபகவன், எண்குணத்தான், வாலறிவன், மலர்மிசை ஏகினான், அறவாழி அந்தணன் முதலிய கடவுட் பெயர்களும் பயின்று வருகின்றன. 'தெய்வம் தொழுதலும்', 'இறைவனடி சேர்தலும்' திருக்குறளில் வருகிற சொற்றொடர்கள்.

நக்கீரர் நான்கு கடவுளர்களைப் பற்றிக் கூறி அவர்களுக்கு உரிய நிறம், வாகனம், கருவி, கொடி முதலியவற்றையும் பாடுகிறார்:

ஏற்றுவல னுயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்,
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்,
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்,
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும் என
ஞாலங் காக்கும் கால முன்பில்
தோலா நல்லிசை நால்வர்

என்பது நக்கீரர் கவிமொழி.

முருகனுக்குரிய கோவில்களையும், தலங்களையும் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் மிக விரிவாகக் கூறியுள்ளமை தமிழ் உலகு நன்கு தெரிந்த செய்தி ஆகும். பக்தர்கள் பலர் தங்களுடைய நித்திய வழிபாட்டிலே திருமுருகாற்றுப்படையை ஓதிவருவது சங்க காலத்தோடு பிணைப்புள்ள ஒரு வழிபாட்டு முறையே ஆகும்.

இவ்வாறுதான் விநாயகர் வழிபாடும் தொன்றுதொட்டு நமது தமிழகத்திலே பயின்று வந்துள்ள ஓர் வழிபாடு ஆகும். இந்தக் கடவுட் பின்னணியை மனத்திலே கொண்டு எழுந்த துதி நூலே, அவ்வையாரின் விநாயகர் அகவலும் ஆகும். நம்முடைய துதி நூல்களிலேயே பலவற்றிலும் பொதிந்துள்ள மரபும், சித்தர் ஞானமும் இந்த அகவலிலும் பொதிந்து உள்ளதற்கு இப்படி ஒரு நீண்ட நெடுந் தொடர்பு இலக்கிய முறையிலே பின்னியிருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் அவ்வையாரின் கால ஆராய்ச்சியிலே புகுந்து, தமிழர்களின் கடவுட் கொள்கையையும் அதனுடைய தொன்மையான மரபையும் மறந்துவிடலாகாது.

★ ★ ★